**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**எம்.சி.ஓ.பி. 72/2024**

**நாள்.21.02.2025**

ம.சா.1 திரு.ராஜகோபால் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தினை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்தின்போது இறந்துபோன எனது தாயாருக்கு 70 வயது என்றால் சரிதான். மனுதாரர்கள் 1 முதல் 5 ஆகியோர்கள் திருமணம் முடிந்து அவரவர்கள் தனித்தனியாக வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரிதான். விபத்து குறித்து நான் புகார் கொடுக்கவில்லை. எனது தாயார் தான் புகார் கொடுத்தார். விபத்திற்கு பிறகு எனது தாயார் 43 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றால் சரிதான். அரசு மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டு, வீட்டிற்கு வந்த பின்புதான் இறந்தார் என்றால் சரிதான். நான்தாக்கல் செய்த ம.சா.ஆ.9 ஆவணத்தின்படி எனது தாயார் மருத்துவமனையிலிருந்து பூரணமாக குணமடைந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் குணம் ஆனாரா என்று தெரியவில்லை. ஆனால் வீட்டிற்கு அனுப்பிவிட்டார்கள். ம.சா.ஆ.9ல் எனது தாயார் பூரணமாக குணம் அடைந்துதான் விடுவிக்கப்பட்டுள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஜெராக்ஸ் ஆவணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளக்கூடியது இல்லை என்றால் சரியல்ல.

விபத்து நடந்தததாக சொல்லப்படும் சாலையானது, திருச்சி டு இராமநாதபுரம் செல்லும் நெடுஞ்சாலை என்றால் சரிதான். விபத்தின்போது எனது தாயார் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ரோட்டினை கடந்தார் என்றால் சரிதான். அவ்வாறு கடக்கும்போது இருபக்கத்தில் இருந்தும் வரும் வாகனங்களை

கவனிக்காமல் விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. விபத்தானது எனது தாயாரின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்றும், அதனால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு எதுவும் கொடுக்க கடமைப்படவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. பாலிசி விதிமுறைகளை மீறியதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்படவில்லை என்றால் சரியல்ல.

எனது தாயாரின் இறப்பானது வயோதிகம் மற்றும் நோயினால் ஏற்பட்டது என்றும், விபத்தினால் ஏற்பட்ட காயம் காரணமாக அவருக்கு இறப்பு ஏற்படவில்லை என்றும், அதனால் எங்களுக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொல்வது சரியல்ல. விபத்தினால் எனது தாயாருக்கு இறப்பு ஏற்பட்டிருந்தால், அவருக்கு முறையான பிரேத விசாரணை செய்யப்பட்டிருக்கும் என்றும் அவ்வாறு செய்யப்படாததினால் அவருக்கு விபத்தினால் இறப்பு ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் அனைத்தும் அதிக இழப்பீடு பெற வேண்டி, பின்னர் உற்பத்தி செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. நான் பல்வேறு இனங்களில் கோரியுள்ள இழப்பீட்டுத்தொகை மிக அதிகம் என்றால் சரியல்ல. விபத்தானது எனது தாயாரின் கவனக்குறைவு மற்றும் போக்குவரத்து விதிகளை மதிக்காமல் சாலையை கடந்ததால் ஏற்பட்டது என்பதால், 2ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்படவில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

ஒப்பம்/–ஏ.கே.மெஹ்பூப் அலிகான் ,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .